வகுப்பு : 8

தேர்வு எண் 858000

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

நேரம் : 2.30 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளி.
கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

### பகுதி – I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15X1=15

1. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு --------
அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி
2. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ------- நீட்சியாகவே உள்ளது
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
3. கற்றவருக்கு அழகு தருவது --------
அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
4. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் -------
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
5. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ------- காரணமாக அமைந்தது
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை
6. 'போனான்' –வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லைத் தேர்க
அ) நட ஆ) செல் இ) பேசு ஈ) போ
7. கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் --------
அ) கால்லிறங்கி ஆ) காலிறங்கி இ) கால் இறங்கி ஈ) கால்றங்கி
8. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் ---------
அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை
9. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் --------
அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ , ஏ ஈ) அ, ஆ
10. திருவிழாவில் யானை ------- வந்தது –சரியான இணைச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) மேடுபள்ளம் ஆ) ஈடு இணை இ) ஆடி அசைந்து ஈ) வாழ்வு தாழ்வு
11. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் -------- தகுதி அறிந்து பேசவேண்டும்
அ) சொல்லின் ஆ) அவையின் இ) பொருளின் ஈ) பாடலின்
12. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ------- மதித்தனர்
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
13. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது --------- ஆகும்.
அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க:

*நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்*
*கலந்த மயக்கம் உலகம் ஆதலின்*

14. விசும்பு என்பதன் பொருள் --------
அ) கலவை ஆ) வானம் இ) பாட்டு ஈ) பூமி
15. இப்பாடலின் ஆசிரியர் -------
அ) பாரதியார் ஆ) தொல்காப்பியர் இ) நல்லந்துவனார் ஈ) வாணிதாசன்

பொருத்துக: 4X1=4

16. நடந்து – முற்றெச்சம் 3
17. பேசிய – குறிப்புப் பெயரெச்சம் 4
18. எடுத்தனன் உண்டான் – பெயரெச்சம் 2
19. பெரிய – வினையெச்சம் \

### பகுதி – II பிரிவு I

எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 6X2=12

20. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
21. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
22. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?
23. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?
24. முறை, பொறை என்பவற்றுக்குக் கலித்தொகை கூறும் விளக்கம் யாது?
25. சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருக்குறள் கூறுவது யாது?
26. 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?
27. [illegible] ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

### பிரிவு II

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக. 6X2=12

28. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?

29. கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.
   அ) பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே!
   ஆ) நீ எத்தனை புத்தங்களைப் படித்திருக்கிறாய்?

30. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

31. கலைச்சொல் எழுதுக.
   அ) Millets  ஆ) Support

32. இரவுபகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக.

33. பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக் குறிகளை இட்டு எழுதுக.
   அ) தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது
   ஆ) திரு.வி.க. எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ் பெற்றது.

34. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.

35. தமிழ்மொழி சார்ந்து உங்கள் பொறுப்புகள் இரண்டினை எழுதுக.

### பகுதி – III பிரிவு I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும் 2x3=6

36. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

37. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

38. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

### பிரிவு II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2x3=6

39. நோய்கள் பெருகக் காரணம் என்ன?

40. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

41. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மிகவும் பழமையான கலைகளுள் ஒன்று மண்பாண்டக்கலை. சிந்துசமவெளி அகழாய்வில் பானைஓடுகள் கிடைத்துள்ளன.என்பதைப் படித்திருப்பீர்களே. தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன. நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கலையழகு மிகுந்த மண் கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

**வினாக்கள்:**
   அ) தமிழ்நாட்டில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ள இடம் எது?
   ஆ) மிகவும் பழமையான கலைகளுள் ஒன்று எது?
   இ) எந்த அகழாய்வில் பானைஓடுகள் கிடைத்துள்ளன?

### பிரிவு– III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2x3=6

42. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

43. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

44. வல்லினம் மிகாத் தொடர்கள் ஐந்தனை எழுதுக.

### பிரிவு – IV

அடிபிறழாமல் எழுதுக. 2+3=5

45. 'தக்கார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

46. அ) 'வாழ்க நிரந்தரம்!' எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.
   ஆ) 'வழிவர்' எனத் தொடங்கும் படைவேழம் பாடலை எழுதுக.

### பிரிவு – V

கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. 3x6=18

47. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

48. அ) நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை? (அல்லது)
   ஆ) அவையறிதல் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறட்பாக்களின் கருத்துகளை எழுதுக.

49. அ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக
(அல்லது)
   ஆ) கொங்குநாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

### பிரிவு – VI

கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. 2x8=16

50. அ) வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
   ஆ) 'காலம் உடன் வரும்' – கதையைச் சுருக்கி எழுதுக.

51. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
   முன்னுரை – நூலகத்தின் தேவை – நூலகத்தின் வகைகள் – நூலகத்திலுள்ள நூல்கள் – படிக்கும் முறை – முடிவுரை. (அல்லது)
   ஆ) '[illegible] விரும்பும் கவிஞர்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

Galaxy S22



www.Padasalai.Net